IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 71/2023

Deposition of Witness : PW 2

| | |
|---|---|
| Name | : முருகன் (வயது – 86) |
| Father's Name /W/o | : த/பெ தொப்பைநாயக்கர் |
| Religion | : இந்து |
| Caste | : – |
| Calling | : – |
| Address | : சங்கரம்பாடி |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 30.10.2025.

## 1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. யார் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும். முருகன், ராமு, தயாளன், சதாசிவம், வில்வம், ஏகாம்பரம் ஆகியோர் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் முருகன் என்பவர் மேற்படி 6 பேர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி 6 பேர் மீது முருகன் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு யார் சொல்லி தெரியும் என்றால் ஏகாம்பரம் சொல்லி தெரியும். ஏகாம்பரம் என்னிடம் சொன்ன தகவல் படி தான் என் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான்.

2. வில்வமும் நானும் அக்கா தங்கையை திருமணம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். ஏகாம்பரம் குடும்ப சொத்து மொத்தம் எவ்வளவு என்று எனக்கு தெரியுமா என்றால் மொத்த அளவு தெரியாது. 20 ஏக்கர் இருக்கும். ஏகாம்பரம் குடும்பம் சொத்தை என்ன செய்தார்கள் என்று நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சொத்தை பிரிக்கவில்லை.

3. மேற்படி வாதி மற்றும் பிரதிவாதிகள் ராமன், வில்வம் ,சதாசிவம், வெற்றிவேல் , ஏகாம்பரம் ,முருகன் அவர்களுக்கு உண்டான சொத்தை அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஏகாம்பரம் 2002 இல் பாகப்பிரிவினை நடைபெற்றது என்று தெரிவித்துள்ளார் என்றாலும் முருகன் 1984 இல் பாகப்பிரிவினை நடைபெற்றது என்றாலும் மேற்படி 2 சாட்சியத்தில் சரியானது என்றால் பாகப்பிரவினை நடைபெறவில்லை அவர்அவர்கள் சொத்துக்களில் பயிர் வைத்து வருகிறார்கள்.

4. சொத்துக்களின் என்னென்ன சர்வே எண்கள் யார் யார் அனுபவித்து வருகிறார்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி விபரம் தெரியாமல் தான் நான் என் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கை பற்றி முழுமையாக தெரியாது என்றாலும் தெரியாமல் தான் சொத்துக்கள் பாகப்பிரிவினை ஆகவில்லை என்று சொத்துக்கள் பாகப்பிரவினை ஆகவில்லை அனைத்து சொத்துக்களையும் அனைவரும் அனுபவித்து வருகிறார்கள்.

5. முருகன் அவர் 2 பிள்ளைகளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ராமன் வகையறாவிற்கும் முருகன் அவர் பிள்ளைகளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். முருகன் பிள்ளைகள் அவர்கள் பெயருக்கு பட்டா வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ராமன் வகையறா அவர்கள் பட்டா வாங்கி அனுபவித்து வருகிறார்கள் என்றால் தெரியாது.

6. ஏகாம்பரம் சொல்லி தயார் செய்து கொடுத்தை தான் என் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதிகளே பாகப்பிரிவினை நடந்ததை ஒப்புக்கொண்டார்கள் நான் அவர்களுக்கு எதிராக சாட்சி அளிக்கிறேன் என்றால் பாகப்பிரிவினை நடைபெறவில்லை. நான் வில்வத்திற்கு சகலை என்பதால் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை நான் உண்மையை தான் சொல்கிறேன் அனைவரும் எனக்கு உறவினர்கள் வில்வம் மட்டும் எனக்கு உறவினர் இல்லை.

7. யார் இந்த வழக்கை தாக்கல் செய்தார்கள் என்ற விபரம் தெரியாமல் தான் இந்த வழக்கில்  சாட்சி அளிக்க வந்துள்ளேன் என்றால் 6 பேர் முருகன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.  நான் யார் யார் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்ற விபரம் தெரியாது என்று நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். மொத்த சொத்தும் முருகன் பெயரில் உள்ளது என்று தெரிவித்துளளேன் என்றால் இல்லை பட்டா மட்டும் தான் அவர் பெயரில் உள்ளது. மொத்த சொத்திற்கு முருகன் பெயரில் பட்டா இல்லை யார் யார் அனுபவித்து வருகிறார்களோ அவர்கள் பெயரில் பட்டா உள்ளது என்றால் முருகன் பெரியவன் என்பதால் அவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டது அவர் பிள்ளைகளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த பிறகு அவர்கள் அனுபவித்து வருகிறார்கள். நான் தாக்கல் செய்த வாக்குமூலம் தவறானது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(2 ஆம் பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை  வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**